செய்தி வெளியீடு எண்.853 நாள். 13.10.2008

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மக்களுக்கு மருத்துவ வசதிகள் தொடர்ந்து கிடைக்கும் வகையில், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காலியாக உள்ள உதவி மருத்துவ அலுவலர் பணியிடங்கள் அனைத்தும் உடனடியாக நிரப்பப்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று உறுதியளித்தார்கள். அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காலியாக உள்ள உதவி மருத்துவ அலுவலர் பணியிடங்கள் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி மருத்துவ சேவை வழங்கும் நோக்கத்துடன் வேலைவாய்ப்பகம் மூலம் தற்காலிக அடிப்படையிலும், தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் முறையாகவும் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகிறது.

பணியில் இருக்கும் மருத்துவர்கள் உயர் கல்வி படிப்பதற்கு செல்வதாலும், சிலர் அரசுப் பணியிலிருந்து விலகுவதாலும், பல மருத்துவர்கள் நீண்ட நாள் விடுப்பிலோ அல்லது பணிக்கு வராமல் தாமாக நின்று விடுவதாலும், புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதாலும், காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டிய தேவை உள்ளது. தற்போது அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மகப்பேறு மருத்துவமையங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ மையங்களில் 756 மருத்துவப் பணியிடங்கள் காலியாக உள்ளன. இப்பணியிடங்களை நிரப்ப அரசு முடிவெடுத்துள்ளது.

காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து மருத்துவ அலுவலர் பெயர் பட்டியல் தற்பொழுது பெறப்பட்டுள்ளது. இந்த மருத்துவர்கள் கால முறை ஊதியத்தில் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட உள்ளார்கள். இதற்கான பணி நியமன கலந்தாய்வு 15–10–2008 முதல் 20–10–2008 வரை (19.10.2008 தவிர) சென்னை எழும்பூரில் உள்ள குடும்ப நல பயிற்சி நிலையத்தில் கீழ்கண்ட தேதிகளில் நடைபெற உள்ளது:

| கலந்தாய்வு நடைபெறும் நாள் | வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலிருந்து இன சுழற்சி அடிப்படையில் (GT/MBC/BCO/BCC/BCM/SC/ST) கலந்தாய்விற்கு அழைக்கப்பட்டவர்கள் விபரம் |
|---|---|
| 15-10-2008 | 1985 ஆம் வருடம் M 09952, நாள் 06/12/85 முதல் 2001 M 11059, நாள் 17/8/01 வரை |
| 16-10-2008 | 2001 ஆம் வருடம் M 11099, நாள் 17/08/01 முதல் 2002 M 06677, நாள் 24/4/02 வரை |
| 17-10-2008 | 2002 ஆம் வருடம் M 07644, நாள் 24/04/02 முதல் 2003 F 05374, நாள் 6/6/03வரை |
| 18-10-2008 | 2003 ஆம் வருடம் M 06151, நாள் 12/6/03 முதல் 2004 F 08975, நாள் 19/7/04 வரை |
| 20-10-2008 | 2004 ஆம் வருடம் F 10574, நாள் 20/7/04 முதல் 2006 F 27300, நாள் 16/10/06 வரை |

இந்த கலந்தாய்வில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மகப்பேறு மருத்துவமையங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ மையங்களில் காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படும்.

இந்த கலந்தாய்வில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பணிநியமன உத்தரவு கலந்தாய்வு நாள் அன்றே வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண்கள் உள்ள மருத்துவர்கள் பொது சுகாதாரத் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து கலந்தாய்வு அழைப்புக் கடிதம் கிடைக்காவிட்டாலும் குறிப்பிட்ட தேதிகளில் நேர்காணலில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

எம். ஆர்.கே. பன்னீர்செல்வம்
அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**